**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2023 யூன் 30 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று**

---

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2023 யூன் 30 இல் முடிவடைந்த ஆறு மாத காலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆம் திகதிய 3119 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) மற்றும் 3120 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகள் மற்றும் 2018 மே 11 ஆம் திகதிய 3650 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) மற்றும் 3651 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கைகளின் 4.04(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் 11 அமுல்ப்படுத்தல் முகவர்கள் காணப்படுகின்றனர். தொழில் பயிற்சிக்கான தரம், பொருத்தம், அணுகல், அங்கீகாரம் மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதன் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை தேவையை பூர்த்தி செய்வதற்கு திறமையான திறன் கல்வி முறைமையை உருவாக்குவது நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த கிரயம் ரூபா 141,524 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1,061.2 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 28,708.23 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்டதுடன் ரூபா 13,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. ஐ.அ.டொலர் 761.2 மில்லியன் மிகுதி தொகை ஜேர்மனி அரசாங்கம், கொரியா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி, ஏனையவர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளை 2014 செப்தெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2021 யூன் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் 2023 யூன் 30 வரை இரு தடவை காலநீடிப்பு செய்திருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று 2023 யூன் 30 இல் உள்ளவாறான 11 முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களுடன் இணங்குகின்றதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றை 11 அமுல்ப்படுத்தல் முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை ஒருங்கிணைந்த மொத்த செலவினக் கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **இரத்மலானையில் உள்ள அத்திடிய விடுதிக் கட்டிடத்தின் நிர்மாணம்** | | |
| (i) | அத்திடிய விடுதி கட்டிட நிர்மாணத்தின் இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இல. 23 இன் பிரகாரம் அளவிடைப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட ரூபா 66.81 மில்லியன் பெறுமதியான 466 உருப்படிகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், விசேட பட்டியல் விகிதத்தின் (SSR) கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 82.48 மில்லியன் மற்றும் நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்வதற்கு BOQ விகிதத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7.54 மில்லியன் உட்பட ரூபா 90.03 மில்லியன் தொகையான 278 வேறுபாடுகள் காணப்பட்டன. | கொவிட் பூட்டுதல் காலப்பகுதியில் தடைசெய்யப்பட்ட பயணம் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடுதல் என்பன தாமதத்திற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். தற்போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு CGTTI இடம் கையளிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணக் கிரயத்தை குறைக்கும் வகையில் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | அத்திடிய விடுதி நிர்மாணத்தில் 46 மின்விளக்குகளை பொருத்துவதற்கு ரூபா 1.99 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட வேண்டியிருந்தது. | ஆரம்ப வடிவமைப்பு மாற்றப்பட்டிருந்தது, எனவே இந்த உருப்படிக்கு புதிய விலைவிகிதம் பயன்படுத்தப்பட்டது. | -மேற்படி- |

**(ஆ) கிளிநொச்சியில் உள்ள இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள விடுதிக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள்**

2017 செப்தெம்பர் 12 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 400 மாணவர்களுக்கான குடியிருப்பு வசதிகளை வழங்குவதற்காக 3 மாடிகளைக் கொண்ட புதிய விடுதிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 253.8 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு 2020 மே 20 இல் ரூபா 185.61 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி 28 இல் கட்டிடத்தின் 1 வது தளத்தை ரூபா 120.14 மில்லியன் திருத்திய மதிப்பீட்டில் பூர்த்திசெய்வதற்காக புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, மின்சாரம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பான பணிகளின் மோசமான முன்னேற்றம் காரணமாக, தங்கும் விடுதி கட்டிடத்தின் 1வது மாடியின் குடியிருப்பு வசதிகளை கணக்காய்வு திகதி வரை பயிற்சியாளர்களுக்கு வழங்க முடியாதிருந்தது. | 2024 யூலை 15 இற்கு முன்னர் மிகுதிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மாணவர்களுக்கு குடியிருப்பு வசதிகள் 2024 யூலை 3 இல் வழங்கப்படும். | ஒப்பந்ததாரரின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | IPC 14 இன் பிரதான பொழிப்பின் பிரகாரம் 2022 ஏப்ரல் 12 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட மொத்த வேலைகள் ரூபா 110.73 மில்லியனாக இருந்த போதிலும் இது இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ் 14 இன் முகப்பில் ரூபா 114.71 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, இந்த IPC இன் கீழ் ஒப்பந்ததாரருக்கு ரூபா 3.58 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் கொடுப்பனவுச் சான்றிதழின் பிரகாரம் ரூபா 110.73 மில்லியனானது IPC 14 இன் பிரதான பொழிப்பில் கழிவிடப்பட்ட விலையாகும், ரூபா 114.71 மில்லியனானது மேற்கொள்ளப்பட்ட உண்மையான வேலையாகும். IPC 14 இற்கான கழிவிடப்பட்ட விலை ரூபா 103.31 மில்லியனாகும். | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பணியின் சரியான தன்மையை சரிபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | **தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நிர்மாணப் பணிகள்** | | |
| (i) | ரூபா 4.47 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் 2016 ஆம் ஆண்டில் பொதுவில்லில் சமையல் கற்கைநெறிக்காக ௌள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் பயிற்றுவிப்பாளர்கள் இல்லாத காரணத்தினால் குறித்த கற்கைநெறி கணக்காய்வு திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இந்த உபகரணங்கள் விளைவற்றிருந்ததுடன் உத்தரவாதக் காலப்பகுதியும் காலாவதியாகியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பயிற்சி உபகரணங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்காக அஹங்கமவில் ஏற்கனவே உள்ள ஹோட்டல் பாடசாலையை ஹோட்டலொன்றாக புனரமைப்பதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 162.18 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. எனினும், 2024 மே 10 ஆம் திகதி வரையிலும் இத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கும் நோக்கத்திற்காக தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நோக்கங்களுக்கு முரணாக ரூபா 91.03 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 22 ஹோட்டல் அறைகள் மற்றும் இதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6.10 மில்லியன் பெறுமதியான தளபாடங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் விளைவற்றிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மேலதிக தாமதமின்றி ஹோட்டல் அறைகளை பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2017 இல் ரூபா 140.21 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட குச்சிவெளி ஹோட்டல் பாடசாலையின் 52 பயிலுநர்கள் தங்குவதற்கு 12 முழு வசதிகளுடனான அறைகளைக் கொண்ட இரண்டு மாடி விடுதிக் கட்டிடம் நிரந்தர நீர் விநியோகம் கட்டிடத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்ததன் காரணமாக 06 வருடங்கள் வரை விளைவற்றிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மேலதிக தாமதமின்றி விடுதி கட்டிடத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு தேவையான வசதிகளை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | **தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிர்மாணப் பணிகள்** | | |
| (i) | மொனராகலை, தம்புள்ள மற்றும் லவ்லேன் பயிற்சி நிலையங்களின் நிர்மாணப் பணிகள் முறையே 70 சதவீதம் மற்றும் 65 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஒப்பந்ததாரர்களால் கைவிடப்பட்டிருந்ததுடன் அந்த நேரத்தில் நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 142.70 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், தேசிய இளைஞர் மன்றமானது ஒப்பந்தங்களை மீள வழங்காமலும், எஞ்சிய பணிகளை 2023 யூன் 30 இற்குள் பூர்த்திசெய்யாமலும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | லவ்லேன் பயிற்சி வகுப்பறை கட்டிடத்தின் தரை தளத்தில் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. மேற்தளத்தில் நான்கு வகுப்பறைகள் அமைக்கும் பணிகள் முடிவடைந்திருந்ததுடன் மீதமுள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். | மீதமுள்ள நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவு அறிக்கையின் பிரகாரம் ரூபா 535.78 மில்லியன் தொகை தேசிய இளைஞர் மன்றத்தில் உள்ள 5 கட்டிடங்களின் மேம்படுத்தல் பணிகளிற்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும், இது அந்தந்த நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களில் ரூபா 456.2 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. | இரத்மலானை NYSC இன் செலவினம் இரட்டிப்பாக கணக்கிடப்பட்டு ரூபா 535.78 மில்லியன் வந்திருந்தது. எமது அறிக்கையின் பிரகாரம் சரியான தொகை ரூபா 497.84 மில்லியனாகும். | நிர்மாணத்தின் சரியான பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(உ)** | **தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரியின் நிர்மாணப் பணிகள்** | | |
| (i) | நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவு அறிக்கையின் பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் 36 கட்டிடங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபா 1,093.48 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. எனினும், | DTET இன் பதிலின் பிரகாரம், DTET இற்கு ஏற்பட்ட மொத்த செலவினம் ரூபா 711.8 மில்லியனாகும். SSDP இன் அமுல்ப்படுத்தல் முகவர்களுக்கான கட்டிடத்தை | நிர்மாணத்தின் சரியான பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்புடைய நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களில் இது ரூபா 711.8 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. | மறுசீரமைப்பதற்கான மதிப்பீட்டில் இந்தத் தொகை அடையாளம் காணப்பட்டது.<br><br>DTET பண்டாரவளை, ஹசலக்க, இரத்மலானை, வவுனியா, களுத்துறை, வாரியபொல, சம்மாந்துறை, நுவரெலியா, பொலன்னறுவை, தம்புள்ள மற்றும் மட்டக்களப்பு ஆகியவற்றின் தொகை இரட்டிப்பாக கணக்கிடப்பட்டு ரூபா 1,093.48 மில்லியன் வந்திருந்தது. | |
| **(ஊ)** | **பல்கலைக்கழக கல்லூரி** | | |
| (i) | பட்டன்கல பல்கலைக்கழகக் கல்லூரியில் உள்ள விருந்தோம்பல் முகாமைத்துவ ஆய்வுகூடத்தில் குளியலறையை அமைப்பதற்காக 2015 ஆகஸ்ட் 24 இல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 464,400 பெறுமதியிலான குளியலறை உபகரணங்கள் கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 06 வரையிலும் விளைவற்றிருந்தன. | தற்போது நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. | மேலதிக தாமதமின்றி நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரியினால் நடாத்தப்பட்ட கற்கைநெறிகளுக்குப் பொருந்தாத ரூபா 1.45 மில்லியன் பெறுமதியான 591 புத்தகங்கள் 9 வருடங்களாக விளைவற்றிருந்தன. | கருத்துரை பெறப்படவில்லை. | புத்தகங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | இரத்மலானைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் தொலைக்காட்சிப் பின் தயாரிப்பு தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் ரூபா 423,243 பெறுமதியான 31 டேபிள் மைக்ரோபோன் (Table Microphone) இருந்த போதிலும் அவை அங்கே கற்கைநெறிகளை தொடரும் மாணவர்களிற்கு சம்பந்தமில்லாத காரணத்தால் கணக்காய்வு திகதியான 2024 பெப்ரவரி 06 வரையிலும் 9 வருடங்களிற்கு மேலாக விளைவற்றிருந்தன. | கருத்துரை பெறப்படவில்லை. | உபகரணங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கற்கைநெறிகளுக்கான 40 புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய திறன் தரநியமம் (NCS) மற்றும் பாடத்திட்டங்கள் மற்றும் கற்கைநெறிகளுக்கான 29 திருத்தப்பட்ட தேசிய திறன் தரநியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவு அறிக்கையில் உள்ளன. எனினும், TVEC இடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மாணவர்களின் தேவைக்கேற்ப கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்படாததாலும், அவ்வாறு அறிமுகப்படுத்தும் கற்கைநெறிகளை நடாத்துவதற்கு தகுதியான பயிற்றுவிப்பாளர்கள் இல்லாததாலும் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தால் நிறுவப்பட்ட தொழில் துறை திறன் சபையின் மோசமான தலையீட்டினாலும் 36 கற்கைநெறிகளை மாணவர்கள் யாரும் பின்பற்றியிருக்கவில்லை என்றும், 12 கற்கைநெறிகள் 5 முதல் 78 மாணவர்கள் வரை பின்பற்றுகிறதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தொழில் துறையினர் தங்கள் தொழில் துறைக்கு தேவைப்படும் என வேண்டும் போது NCS உருவாக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட தொழில் துறையால் பயிற்சி கற்கைநெறி அமுல்ப்படுத்தப்படுகிறது. எனவே, சில NCS's அந்தத் தொழில் துறையின் விருப்பத்தின் பிரகாரம் பயன்படுத்தப்படுவதில்லை. ISSCகள் எப்போதும் NCS, பாடத்திட்டம் மற்றும் சரிபார்ப்பு செயன்முறையின் அபிவிருத்தியில் ஈடுபடுகின்றன. | தொடர்புடைய தேசிய திறன் தரநியமம் மற்றும் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 உள்ளகக் கட்டுப்பாடு

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அமுல்ப்படுத்தும் முகவரின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | SSDD இற்கான பதவியணியினரை அங்கீகரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பதவியணி திருத்தம் செய்யப்பட்டது. பல பதவிகள் அங்கீகரிக்கப்படவில்லை. உள்ளக கணக்காய்வாளர் பதவியணி அவற்றில் இருந்தது. எனினும், SSDP குறைவான பதவியணியினருடன் இயங்குவதால், அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் SSDD ஐயும் கணக்காய்வு செய்வார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். | அமுல்ப்படுத்தல் முகவரால் உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |